மெதிரிகிரிய பிரதேச சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மெதிரிகிரிய பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதிரிகிரிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சிமன்ற நிறவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமத்துடன் தொடர்பான இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நியமத்தின் 02 ஆம் அத்தியாயத்தின் ஈ.ஜி 2.7 இன் பிரகாரம் பெறுமானத்தேய்வு கணக்கீட்டு அடிப்படை விரிவான வருமான கூற்றில் அறவிடப்பட்ட பெறுமதி மாற்றப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பகல்நேர பாதுகாப்பு நிலைய கட்டிடத்திற்காக ரூபா 879,430 ஆன பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டு விரிவான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது.	திருத்திக் கொள்வதாக.	உள்ளூராட்சி மன்ற நிறுவனங் களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	நியமத்தின் 02 ஆம் அத்தியாயத்தின் ஈ.ஜி 3.3 இன் பிரகாரம் பெறுமானத்தேய்வு அது நிறுவப்பட்டு அதன் நோக்கத்திற்காகப் பயன்படுத்தத் தயாரான நேரத்திலிருந்து தேய்மானத்தைக் கணக்கிட வேண்டும் என்று கூறப்பட்டிருந்த போதிலும், பகல்நேர பராமரிப்பு நிலையம் விளையாட்டு பொருட்கள், உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் சாதனங்களைப் பயன்படுத்தத் தொடங்குவதற்கு முன்பே, செலவின குறிப்பில் ரூபா. 1,431,836 தேய்மானம்	திருத்திக் கொள்வதாக.	உள்ளூராட்சி மன்ற நிறுவனங் களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	செய்யப்பட்டு விரிவான வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.		
(இ)	ஊழியர் கடன்கள் மற்றும் முறபணங்கள் உட்பட அனைத்து வகையான பெறவேண்டியவற்றுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், அந்த மீதிகளுக்கு எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.	எதிர்காலத்தில் அத்தகைய ஏற்பாடு தேவைப்பட்டால், அது செய்யப்படும் என்பதாக	உள்ளூராட்சி மன்ற நிறுவனங் களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சூரிய மின்சக்தி அமைப்பு வருமானம் ரூபா.190,017 ஆகவும் மின்சாரச் செலவுகள் ரூபா 210,915 ஆகவும் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	வருமானம் மற்றும் செலவுகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கோள்ளப்படுவதாக.	சூரிய மின்சக்தி அமைப்பு தொடர்பிலான சகல வருமானங்கள் மற்றும் செலவீனங்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரை நடைமுறை வங்கிக் கணக்கிற்கு பெறப்பட்டிருந்த ரூபா 195,401 நிலையான வைப்பு வட்டித் தொகை நிலையான வைப்பு வட்டி கடன்பட்டோரக காட்டப்பட்டிருந்தது.	திருத்திக் கொள்வதாக.	நிலையான வைப்பு வட்டி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	மெதிரிகிரிய வடதாகே தளத்தில் சுகாதார மற்றும் ஓய்வு அறை வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் தொழிற்றுறை கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் பெறுமதித் தொகை ரூபா 1,173,974 ஆல் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	திருத்திக் கொள்வதாக.	நிர்மாணக் கடன் பட்டோர்கள் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகள் சரியாக கணக்கீடு செயங்யப்பட வேண்டும்.
(ஈ)	கடந்த வருடத்திற்காக கிடைக்கப் பெற்றிருந்த கழியாட்ட வரி வருமானம் ரூபா 224,000 வருமானமாக கருதப்படாது பல்வேறு சேமிப்பு வகைகளின் கீழ் வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் கழியாட்ட வரி வருமானம் ரூபா 509,000 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது.	திருத்திக் கொள்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டில் கடன் கொடுத்தோரின் கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா 949,618 ஆன மீதி 04 கடன் கொடுத்தோர் மற்றும் உரிய செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	திருத்திக் கொள்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஊ)	மெதிரிகிரிய பகல்நேர பராமரிப்பு மைய கட்டிடத்தின் பெறுமதி கட்டுமான பணிகள்	திருத்திக் கொள்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்

	நடைபெற்றுக்கொண்டிருக்கும் சொத்துக்கள் உபகரணங்களின் கீழ் ரூபா 35,177,198 தொகை கூடுதலாக காாட்டப்பட்டிருந்தது.		
(எ)	பல்வேறு வெளியார் நிறுவனங்களின் நிதி ஒதுக்கீடுகள் ஊடாக முந்தைய ஆண்டுகளில் நிறுவப்பட்டிருந்த ரூபா 24,426,556 பெறுமதியான நடைபாதை பாலங்கள் மதகுகளின் கீழ் காட்டப்பட வேண்டிய 27 திட்டங்களின் பெறுமதிகள் விடுபட்டதனால் சொத்துக்கள் உபகரணங்கள் மீதி மற்றும் மூலதன உதவி மீதிகள் அத்தொகையினால் குறைத்துக்க காட்டப்பட்டிருந்தது.	திருத்திக் கொள்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஏ)	வேளியார் நிறுவனங்களினாள் கிடைக்கப பெற்ற நிதி மூலதனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 3,759,045 பெறுமதியான கட்டிடம் மூலதன உதவி கணக்கு மற்றும் கட்டிடக் கணக்கிலும் விடுபட்டிருந்தது.	சீராக்கம் செய்து கொள்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஐ)	காசுப் பாய்ச்சல் கூற்றில் செயட்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல் கணிப்பீட்டின் போது மதலீட்டு வருமானம் ரூபா 2,080,986 பெறுமதியான தொகை குறைத்து பணமாகப் பெற்ற முதலீட்டு வருமானமான ரூபா 1,721,829 தொகை முதலீட்டு செயட்பாட்டினூடான காசுப் பாய்சலுடன் சேர்க்கப்பட வேண்டியிருந்தும் பிழைகளுடன் கூடிய ரூபா 668,634 தொகை செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து மாத்திரம் கழித்துக் காட்டப்பட்டிருந்தது.	திருத்திக் கொள்வதாக.	சரியான காசுப்பாய்ச்ல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும்.
(ஒ)	காசுப் பாய்ச்சல் கூற்றில் பெற வேண்டியவற்றில் அதிகரிப்பு ரூபா 55,830,119 ஆக இருந்த போதிலும் அது ரூபா 67,982,281 என ரூபா 12,152,162 கூடுதலாகவும் செயற்பாட்டு நடவடிக்கை களின் காசுப் பாய்ச்சல் கணிப்பீடு செய்யும் போது ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் அதிகரிப்பு ரூபா. 273,394 ஆகவும் அது ரூபா 947,028 ஆக ரூபா 673,634 அதிகமாக செலுத்த வேண்டியவை அதிகரிப்பு ரூபா 31.806,381 ஆகவும் ரூபா 38,967,862 என ரூபா 7,161,481 கூடுதலாகவும காட்டப்பட்டிருந்ததுடன் ஏனைய நடைமுறை பொறுப்புக்கள் காணப்படாத நிலையில் ரூபா 38,413 நேர் மீதியும் ரூபா 7,510,820 மறை மீதியொன்றமாக தேறிய பெறுமதி ரூபா 7,472,407 தொகை மறை மீதி கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தது.	திருத்திக் கொள்வதாக.	சரியான காசுப்பாய்ச்ல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும்.

(ஓ)	முதலீட்டு செயற்பாடுகளிலாலான காசுப் பாய்ச்சல் கணிப்பீட்டின் போது, மீளாய்வாண்டில் காசாக்கப்பட்ட ரூபா 10,000,000 நிலையான வைப்பு பாதக மீதித் தொகையொன்று காணப்படுவதனால் முதலீட்டு செயற்பாட்டினூடான தேறிய காசுப பாய்ச்சல் ரூபா 20,000,000 குறைவாக காட்டப்பட்டிருந்தது.	திருத்திக் கொள்வதாக	காசுப் பாய்ச்சல் சரியாக கூற்று தயாரிக்கப்பட வேண்டும்.

1.6.3 இணங்காத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	.மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 02 கணக்கு மீதிகளின் பெறுமதி அக்கணக்கு மீதிகளுக்குரிய பயன்பாட்டு ஆவணங்களின் மீதிகளுடன் ஒப்பிடும்போது ரூபா 384,365 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது.	சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	கணக்கு புத்தகங்களை ஒப்பிட்டு திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஆ)	ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 4 அட்டவணைகளின் பெறுமதி அக்கணக்கு களுக்கரிய பயன்பாட்டு ஆவணங்களின் மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 611,931 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.	ஆவணத் தவறுகள் என்பதாக	கணக்கு புத்தகங்களை ஒப்பிட்டு திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

1.7 <u>இணக்கமின்மைகள்</u>

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங் களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1988 இன் 56, 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல்	தொழிற்சாலைகளின் கழிவுப்பொருள் வெளியேற்றம், படிவுகள், காற்று வெளியேற்றம், அதிர்வு மற்றும் இரைச்சல் வெளியேற்றம் ஆகியவற்றிற்காக அதிகாரசபையால் வழங்கப்படும் அனுமதி ஒவ்வொரு 03	தொழிற்சாலைகளில் உள்ள குறைபாடுகள் மற்றும் கட்டணம் செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அனுமதிகளை வழங்க முடியவில்லை என்று கூறப்பட்டுள்ளது.	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	சட்டத்தின் 23 (ஆ) பகுதி	வருடங்களுக்கும் புதுப்பிக்கப்பட வேண்டிய போதிலும் , 16 சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் மீளாய்வாண்டிற்குள் புதுப்பிக்கப்படவில்லை.		
(ஆ)	2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் திருத்ததுடன் அதி விஷேட வர்த்தமானி	2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை 133 கட்டிட விண்ணப்பங் களுக்குரிய அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 113 நிர்மாணங்களுக்காக டு இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை	விண்ணப்பதாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக	வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம்			
(i)	நி.பி. 371	ரூபா 57,000 பெறுமதியான 02 முற்பணங்கள் 01 மாதம் 06 நாட்கள் முதல் 06 மாதங்கள் 27 நாட்கள் வரை தாமதமாக தீர்வு செய்யப்பட்டிருந்தன.	எதிர்காலத்தில் இது சரி செய்யப்படும் என்பதாக	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நி.பி. 571(2)	ரூபா 78,728 பெறுமதியான காலாதியான 08 வைப்புக்கள் தீர்வு செய்யபபட்டிருக்க வில்லை.	விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் .
(ஈ)	பொது நிர்வாக சுற்றறிக்கை			
(i)	1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை	08 வாகனங்கள் மற்றும் 05 டேர்லர்களில் அரச இலட்சிணை பொறிக்கப் பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் அது சரிசெய்யப்படும் என்பதாக.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ii)	2009 ஏப்ரல் 09 ஆந் திகதிய 9/2009ஆம் இலக்க பொது நிர்வாக மற்றம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு	பிரதேச சபை கைரேகை இயந்திர அறிக்கைகளை அல்லாமல், 2024 ஆம் ஆண்டுக்கான உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவாக ரூபா	புதிய கைரேகை இயந்திரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

	செயலாளரின் சுற்றறிக்கை	1,676,221 கொடுப்பனவு செய்திருந்தது.		
(உ)	2017 திசெம்பர் 21, ஆந் திகதிய திறைசேரியின் 2/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை	வாகனங்கள் முற்றத் தொகுதியில் பாதுகாப்பற்ற வகையில் நிறுத்தப்பட்டிருந்த கெப் வண்டியின் உரிமையை கையேற்கவோ அல்லது அதை உறுதிப்படுத்தும் ஒரு தரப்பினரிடம் உரிமையை ஒப்படைக்கவோ நடவடிக்கை எடுக்கவில்லை.	தலைமைச் செயலாளருக்கு தேவையான அறிவுறுத்தல்களைக் கோரி ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	. வாகனங்களின் உரிமையை கையேற்று பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 20,980,346 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,211,799 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பிடப் பட்ட வருமானம்	பட்டியலிடப்ப ட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பிடப்பட் ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	5,387,230	4,427,379	6,253,025	4,172,118	4,993,116	4,382,673	4,457,112	5,997,764
(ii)	வாடகை	12,893,184	9,517,784	8,698,926	1,642,116	15,858,300	7,618,445	10,882,609	823,258
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணங் கள்	414,820	544,172	544,172	-	309,800	531,960	531,960	-
(iv)	ஏனைய வருமானம்	5,471,880	4,107,185	4,433,613	248,340	3,127,200	4,835,294	4,785,398	574,768
	மொத்தம்	24,167,114	18,596,520	19,929,736	6,062,574	24,288,416	17,368,372	20,657,079	7,395,790

2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**வீத வரி**		
(i)	1946 இன் 30ஆம் இலக்க குத்தகை மற்றும் மதிப்பீட்டு கட்டளை சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் வீதவரி ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்து வீதவரி அறவிடயப்பட வேண்டிய போதிலும் 2013 ஆண்டின் வீதவரி மதிப்பீட்டை அடிப்படையாக கொண்டு அறவிட்டமையால் உரிய கால ரீதியில் செயற்படாத காலம் 06 ஆண்டுகளாக இருந்தன.	புதிய மதிப்பீடொன்று மேற்கொள்வதாக.	வீதவரி ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 3,045,830 மதிப்பீட்டு வரி அறவிடப்பட வேண்டியிருந்தது, அதில் ரூபா 651,859 தொகை 44 மதிப்பீட்டு அலகுகளிலிருந்து 2 முதல் 29 ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்தது. 20 அரச நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவையில் உள்ள மதிப்பீட்டு வருமானம் ரூபா 58,327 ஆகும்.	வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	நிலுவை வருமானத்தை விரைவில் சேகரித்தல் வேண்டும்..
(ஆ)	**வாடகை**		
(i)	11 முதல் 30 ஆண்டுகள் வரை அறவிடுவதற்கு இருந்த இருந்த 18 கடைகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்களின் வாடகை ரூபா 209,354 ஐ அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பதிவழிப்புச் செய்ய ஆளுநருக்கு அங்கீகாரத்திற்கு அளிக்கப்பட்டுள்ள தாக.	நிலுவை வருமானத்தை சேகரித்தல் வேண்டும்.
(ii)	வாடகை வாகனங்களை வழங்கியதில் 2 முதல் 4 ஆண்டுகள் வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 99,999 ஆன 5 நிலுவை வருமானம் மீதிகளை வசூலிக்க மீளாய்வாண்டில், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக.	நிலுவை வருமானத்தை சேகரித்தல் வேண்டும்.
(ஈ)	**ஏனைய வருமானங்கள்**		
(i)	நீண்ட காலமாக நிலுவையில் உள்ள ரூபா 556,608 நீர் கட்டண நிலுவைத் தொகையை வசூலிக்க மீளாய்வாண்டில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	நிலுவையில் உள்ள நீர் கட்டண நிலுவைத் தொகையை உறுதிப்படுத்தும் குழு நியமிக்கப்பட்டு அதனை பரீட்சிப்ப மேறகொள்வதாக.	நிலுவை வருமானத்தை சேகரித்தல் வேண்டும்.
(ii)	மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா. 62,593,339 மற்றும் முத்திரை கட்டணங்கள் ரூபா. 21,349,680 ஆக இருந்தது.	மாகாண திறைசேரியிடமிருந்து பெறுவதற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக .	குறிப்பிட்ட வருவாயை தாமதமின்றி கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றதல்

பிரசேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
உப உறுப்புரை பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 23 பிரதான விடயங்களை நிறைவேற்று வதற்காக உப உறுப்புரை பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 10 பிரதான விடயங்களுக்காக உப உறுப்புரை பிறப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக	உப உறுப்புரை பிறப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்து	பரிந்துரை
(அ)	முந்தைய ஆண்டின் இருப்பு மதிப்பீட்டில் குறைபாடுள்ளதாக அடையாளம் காணப்பட்ட 13 வகைப் பொருட்களுக்குறிய 132 அலகுகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 760 மற்றும் 102 இற்கு அமைய நடவடிக்கை மேற்கொண்டு எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் பொறுப்பானவர்களை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பொறுப்பானவர்களை அடையாளம் கண்டு எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பதாக.	நட்டத்தினை ஈடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	பிரதேச சபை சட்டத்தின் 28 ஆம் பிரிவின் படி வீதிகள் அடையாளம் காணப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும் என்றாலும், CGLG திட்டத்தின் மூலம் GPS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சாலை அளவீடுகளை மேற்கொள்ளப் பட்டாலும், அவற்றை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் வீதிப் பட்டியலைத் தயாரிப்பதற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வீதிப் பட்டியல் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக.	வீதிப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.
(இ)	பிரதேச சபைக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் அதிகாரம் உள்ள 10 தொழில்களுடன் தொடர்புடைய 900 நிறுவனங்கள் வர்த்தக மற்றும் வணிக அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிருந்தாலும், அவற்றில் 82 மட்டுமே சுற்றுச்சூழல் அனுமதிகளைப் பெற்றிருந்ததுடன் ,	தொழிற்சாலை பரிசீலனையூடாக சுற்றச் சூழல் அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக.	அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு உரிமையுள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும்.

	அதனால் சபைக்கு ரூபா 3,272,000 வருமான ,ழப்பு ஏற்பட்டிருந்தது.		
(ஈ)	2022 ஜூன் 22 ஆம் திகதி ரூபா 114,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டர் கிறேடர் இயந்திரத்தின் 06 சக்கரங்களும் 2024 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இயந்திரத்தில் பூட்டப்படாது களஞ்சிய சாலையில் வைக்கப்பட்டிருந்தது.	மோட்டர் கிறேடர் இயந்திரம் பழுது பார்க்கப்பட்டதும் பாவனைக்கு எடுப்பதாக.	தேவையறிந்து கொள்வனவு செய்யப்பட வேண்டும்.
(உ)	அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் கிடைக்கப் பெற்றிருந்த மோட்டார் வல்லம் மற்றும் இயந்திரம் என்பவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டு கணக்ககளில் சொத்துகளின் காட்டப்படுவதாக.	சொத்துக்கள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டில் காசுப்பாய்சல் கூற்றுக்களில் காட்டப்படும் கூட்டுத்தொகை ரூபா 30,873,442 ஆன சொத்துக்கள் மீதி 03, வருமான மீதி 02 மற்றும் செலவு மீதியொன்று ஆகியவற்றின் விவரமான தகவல்களை கணக்காய்விற்கு வழங்குவதற்கு முகாமை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சாட்சிகள் வழங்கப்படுவதாக.	தனிப்பிட்ட மீதிகள் உட்படுத்தப்பட்ட அட்டவணை சமர்பிக்கப்பட வேண்டும்.

3.3 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபைக்குச் சொந்தமான ரூபா67,427,409 பெறுமதியான 17 சொத்துக்களுக்குரிய 43 அலகுகள் பல்வேறு காரணங்களால் விளைவற்று இருந்தன.	அவற்றை ஏலத்தில் விற்பனை செய்ய பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	சொத்துக்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வடமத்திய தலைமைச் செயலாளரால் ஒப்படைக்கப்பட்டு 21 ஆண்டுகளுக்கும் மேலாக சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, கெப் வண்டி முறையாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்காமல் பாதுகாப்பற்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	வாகனத்தின் புத்தகத்தின் நகல் பிரதியுடன் இயந்திரப் பொறியாளருக்கு அனுப்பி வைக்கப்படும் என அறிவிக்கப் பட்டிருந்தது.	பொருத்தமான வகையில் சொத்துக்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2023 திசம்பர் 15, ஆந் திகதி பேக்கோ லோடரின் இடது பக்க கதவின் கண்ணாடி உடைந்ததால் ஏற்பட்ட ரூபா. 146,125 நட்டம் தொடர்பான நிதிப் பிரமாணம் 104 (3) இன் பிரகாரம் இரண்டு அறிக்கைகளும் 2023 திசெம்பர் 22, ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தன. இந்த இழப்புக்கு காப்புறுதி நிறுவனம் ரூபா. 60,000 மாத்திரமே மீளப்புச் செய்தயைால் ரூபா 86,125 ஆன நட்டம் அறவிப்படவில்லை.	தொடர்புடைய அறிக்கைகளை சரியான காலப்பகுதிகளில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள தாக.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 பெறுகை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பெறுகை வழிகாட்டுதல் கோவையின் 5.6.1 ஆம் பிரிவின் படி, குறிப்பிட்ட விவரக்குறிப்புகள் குறிப்பிடாமல் ரூபா 76,000 பெறுமதியான டொட் மேட்ரிக்ஸ் அச்சுப்பொறியை வாங்குவதற்கு விலை கோரப்பட்டிருந்தது..	.குறிப்பிட்ட விவரக் குறிப்புகளைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக.	குறிப்பிட்ட விவரக் குறிப்புகளின் கீழ் பெறுகை செய்யப்பட வேண்டும்.

3.6 ஒப்பந்த நிர்வாகம்

மெதிரிகிரிய பகல்நேர பராமரிப்பு மைய நிர்மாண துணைத் திட்டம் - ரூபா 25,389,812

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அரசு பெறுகை வழிகாட்டல்களின் 8.12.1 மற்றும் 8.12.2 இன் பிரகாரம் நிபந்தனைகளுக்கு இணங்க பணி முடிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்த பிறகு பணம் செலுத்த வேண்டும் என்றாலும், நிறைவேற்றப்படாத 04 பணிகளுக்கு ரூபா 1,687,073 பணம் செலுத்தப்பட்டிருந்தது.	பூர்த்தி செய்யப்படாத பணி உருப்படிகள் முடிக்கப்பட்டுள்ளதாக.	பூர்த்தி செய்யப்படாத பணி உருப்படிகளை பூர்த்தி செய்யபட்டதாக சான்றளித்த உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	அளவு பில் உருப்படி எண் 04 இன் கீழ் Laminated Plywood Shuttering பயன்படுத்தப்பட்டுள்ளதால், அந்த மென்மையான மேற்பரப்புகளில் 15 mm தடிமன் கொண்ட Plaster மீண்டும் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை, Plaster வேலை என்ற பொருள் வேலை உருப்படி V-2 இன் கீழ் சேர்க்கப்பட்டு, ரூபா 732,152 சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்தது.	மேல் தளத்தின் நிர்மாணம் குறித்து எந்த முடிவும் இல்லாததால், உட்கூரை சாந்து செய்யப்பட்டது.	சிக்கனமற்ற கொடுப்பனவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.
(இ)	அளவீட்டு பத்திரத்தின் 19 ஆம் இலக்க உருப்படியின் கீழ், Toilet Floor & Wall සහ Balcony பிரிவுகளின் Water proof , தேவையான 155 சதுர மீற்றருக்கு பதிலாக, மதிப்பிடப்பட்ட ரூபா 624.13 ஐ விட அதிகமாக ரூபா 1,243,195 சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டது.	மேல் தளத்தின் கட்டுமானம் குறித்து எந்த முடிவும் எடுக்கப்படாததால், முழுப் பகுதியும் Water proof செய்யப்பட்டது.	- மேற்படி -
(ஈ)	ஒப்பந்த விலகல்களின் பெறுமதி ரூ. 7,945,353 ஆக ஒப்பந்த பெறுமதியில் சுமார் 35 சதவீதமாக இருந்ததால், மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் அங்கீகரித்தல் மிகவும் பலவீனமான மட்டத்தில் இருந்தது,	து கட்டமைக்கப்பட்ட திட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக தொகைகள் மாறிவிட்டதாக.	துல்லியமாக மதிப்பீடுகள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

(உ)	இந்தத் திட்டம் தொடர்பாக எந்தவொரு தர ஆய்வு அறிக்கையையும் பெற்றுக்கொள்ளாமல், 101.6 கன மீட்டர் கொன்கிரீட் பணிக்காக ரூபா 4,507,890 பணம் செலுத்தப்பட்டிருந்தது.	தர ஆய்வு அறிக்கைகள் சமர்ப ˙பிக்கப்பட்டுள்ளதாக.	கொடுப்பனவு செய்வதற்கு முன் தர ஆய்வு அறிக்கைகளைப் பெற வேண்டும்.

3.7 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபையின் 11 பதவிகளுக்குரிய 13 உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் அலுவலக உதவியாளர், மற்றம் நூலக உதவியாளர் பதவிகளுக்காக 02 உத்தியோகத்தர்கள் மிகையாக இருந்தனர்.	ஏற்றுக்கொள்தாக.	வெற்றிடங்கள் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	பிரதேச சபையின் நூலக உதவியாளர், வீதி தொழிலாளர்கள், சாரதிகள், அலுவலக பணி செயற்பாட்டில் பதவிகளில் சேவை புரிகின்ற 18 உ்தியோகத்தர் தமது நிரந்தர பதவிக்களுக்குரியதாக அல்லாத முகாமைத்துவ சேவைகள் , வருமான பரிசோதகர்கள், சாரதிகள், காலாளிகள், முன்பள்ளி காப்பாளர்கள் மற்றும் நூலக உதவியாளர் பதவிகளில் 01 ஆண்டு முதல் 10 ஆண்டு காலமாக சேவை புரிந்து வருகின்றனர்.	வெற்றிடங்கள் இருப்பதாலும், தேவையான கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதாகவும்.	தொடர்புடைய நிரந்தர கடமைகள் வழக்கமான பதவிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.
(இ)	தாபன விதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.4 மற்றும் 4.6 பிரிவுகள் மற்றும் 2019 ஜுலை 27, திகதிய 05/2019 ஆம் இலக்க திறைசேரி பிரதிச் செயலாளரின் பொது நிதி சுற்றறிக்கை யின் பிரிவு 03 ஆம் பந்தியின் படி, மரணித்த உத்தியொகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 32,679 ஆனகடனை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பதவிழிக்க முடியாத தொகையை பதிவழிப்பதற்கு செய்வதற்கு ஆளுநரின் அங்கீகாரத்தை பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	கடன் மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக பங்களிப்புகளை செலுத்துவதில், ரூபா 94,784 சேமலாப வைப்பு நிதியாகவும், ரூ. 14,218 ஊழியர் நம்பிக்கை நிதியாகவும் மொத்தம் ரூபா 109,002 தொகை குறைவாக செலுத்தப்பட்டிருந்தது.	பங்களிப்பு கொடுப்பனவின் போது மொத்த உழைப்பு அடிப்படையில் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	மொத்த உழைப்பீன் அடிப்படையில் பங்களிப்புகள் கணக்கிடப்பட வேண்டும்.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2015 மார்ச் 18 ஆம் திகதி 4/2015 ஆம் இலக்க வடமத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 1.3 இன் பிரகாரம் சபையினால் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு ஒவ்வொரு மாத இறுதியில் பொதுச்சபைக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் போதியளவு உள்ளக கணக்காய்வொன்று மேற்கொண்டு சபையின் பணிகள் மற்றம் இலக்குகளை செயற்படுத்த ஒத்துழைப்பு வழங்க்பபட்டிருக்க வில்லை.	இனங்காணப்பட்ட பிரச்சினைகளின் போது உள்ளக புலனாய்வொன்று மேற்கொள்வதாக	போதியளவு உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்

4.2 பாதிட்டு கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
35 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,870,600 தொகை முழுமையாக சேமிக்கப்பட்டிருந்த துடன் மேலும் 93 செலவினங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 200 முதல் ரூபா 5,964,534 அதாவது 1 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான விலகலில் சேமிப்பு காணப்பட்ட தால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் வழிகாட்டல் கருவியாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக	பாதீட்டு அறிக்கை ஆக்கபூர்வமான நிதி வழிகாட்டல் ஒன்றாக பயன்படுத்தப்பட வேண்டும்

4.3 சுற்றாடல் பிரச்சினைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
யுந்தகனாவ பிலிசாரு தொகுதியில் உற்பத்தி செய்யப்படும் உர இருப்பின் பெறுமதியைக் கணக்கிட்டு கணக்கீடு செய்வதற்கு வழிமுறை ஒன்றை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந திகதி வரை உருவாக்கப்படவில்லை.	தராசு வசதிகள் இல்லாததால் இருப்பைக் கணக்கிட முடியவில்லை என்பதாக	சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் ஒழுங்குபடுத்தலின் பிரகாரம் பிரதேச சபையால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் நிகழ்ச்சிகள் மற்றும் நியதிகள் இனங்காணப்பட்டு செயற்படுத்தல் இடம்பெற்றிருருக்கவில்லை.	எஇனங்காணப்பட்ட நிகழ்சசிகளை மேற்கொள்தாக	சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.